★ காஞ்சிபுரம்
★ பெனுரிஸ்
★ கெவி தஞ்சூா
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ2/50

மங்கள வைபவ...
கேற்ப, உடுபுடைவை...

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

ஏடு: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 20 உ. வெள்ளிக்கிழமை 27 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (02 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY இதழ்:-151

## எதிர்வரும் ஜூலை 29ற்கு முன்னர்

# அமைதிப்படையை திருப்பி அழைக்க இந்தியாவின் உதவி கோருகிறார் பிரேமா!

## பத்தரமுல்லை கூட்டத்தில் தகவல்

கொழும்பு, ஜூன் 2

எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதியுடன் இந்திய அமைதிப்படையினர் இலங்கைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதற்கு முன்னர் இந்திய இராணுவத்தை திருப்பி அழைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி இந்திய அரசையும் பிரதமர் ராஜீவ் காந்தியையும் கேட்கவிருக்கிறேன்—

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

கொழும்பை அண்டிய பத்தரமுல்லையில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அடுத்த மாத முடிவிற்கு முன்னர் சகல இந்தியத் துருப்புக்களும் இங்கிருந்து செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

சார்க் நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு இந்த ஆண்டு இலங்கையில் நடக்க இருக்கின்றது.

வெளிநாட்டு இராணுவம் ஒன்று நம் நாட்டில் நிலை கொண்டிருந்தால் சுயமரியாதையுடன் இந்த உச்சி மாநாட்டை நாம் நடத்த முடியாது. எனவே இந்திய இராணுவம் அடுத்த மாதத்துக்குமுன்னர் திருப்பி அழைக்கப்படவேண்டும்.

இந்திய அரசு பல தடவைகளில் இலங்கைக்கு உதவியது.

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பி வைத்து உதவியது போன்று, இரண்டு மாதங்களுக்குள் அப்படையை திருப்பி அழைத்து இந்தியா எமக்கு உதவும்.

ஜனாதிபதியானதும் இந்தியப் படையை வாபஸ்பெறச் செய்வேன் என்று உறுதியளித்தேன்.

இந்தியத் துருப்புக்களைத் திருப்பி அழைக்கும் நடவடிக்கை சில காலத்துக்கு முன்னர் ஆரம்பமானது.

இந்தியா தனது துருப்புக்களை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து வாபஸ்பெறத் தொடங்கியது. படைகளைத் துரிதமாகத் திருப்பி அழைப்பதே தற்போது முக்கியமானதாகும்.

துருப்புக்களை வாபஸ்பெறும் நடவடிக்கைக்குப் பாதகமாக எவரும் எதனையும் செய்யக் கூடாது.

துருப்புக்கள் திருப்பி அழைக்கப்படும்போது நாம் கட்டுப்பாட்டுடன் நடந்துகொளவது அவசியமாகும்.

எமக்கு இடையில் தோன்றிய கருத்து வேறுபாடுகளினால் இந்தியத் துருப்புக்கள் எமது நாட்டுக்கு வந்தன. எமக்கு இடையே பேச்சுக்களை நடத்தி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள நாம் முயற்சி செய்ய

[6ஆம் பக்கம் பார்க்க]

## கருத்து வெளியிட மறுப்பு

புதுடில்லி, ஜூன்2

இந்தியப் படையைத் திருப்பி அழைக்குமாறு இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்துள்ள கோரிக்கை பற்றிக் கருத்து வெளியிட புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் மறுத்துவிட்டார்.

உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடமிருந்து தகவல் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. அப்படியிருக்கும்போது இதுகுறித்து கருத்து எதுவும் வெளியிட முடியாது என்று அந்த அரசு அதிகாரி தெரிவித்தார். [உ-எ]

## பல்கலைக்கழக வேலைநிறுத்தம்: திங்களன்று முக்கிய முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக முக்கிய முடிவு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற இருக்கும் பொதுசனக் கூட்டத்தில் எடுக்கப்பட இருக்கிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் இம் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வரும் பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஒன்பதாவது நாளாக நேற்று இடம்பெற்றது.

கொழும்பு சென்றுள்ள இச் சங்கத்தின் தலைவர் திரு. இ. சிவயோகேஸ்வரன், செயலாளர் திரு. ஜே. சி. எட்வேட் ராஜா ஆகியோர் கொழும்பில் பல்கலைக் கழக ஊழியர் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தி அதன் பலாபலன்களை யாழ். சங்கத்துக்கு அறிவிப்பார்கள்.

கொழும்பு சம்மேளனம் வேலை நிறுத்தத்தைக் கைவிட்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மினிபஸ்கள் தரிப்பதற்கு தனியான இடம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வாகன நெருக்கடியைத் தவிர்க்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மினி பஸ்களை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள, சிங்கள மகா வித்தியாலயம் இருந்த மைதானத்தில் தரிக்கச் செய்யவும் — அவை தத்தமது பாதைகளுக்குப் புறப்படும் நேரத்துக்கு மட்டும் பஸ் நிலையத்துக்கு வரவும் — ஏற்பாடு செய்யப்படும் என அறிய வருகிறது.

இட வசதி இருக்கும் சந்தர்ப்பங்களில், பஸ்நிலையத் தரிப்பிடங்களில் இருந்தே மினி பஸ்கள் புறப்பட அனுமதிக்கலாமா என்பது குறித்தும் ஆராயப்படும்.

அதற்கேற்ற விதத்தில் பஸ், மினிபஸ் நேரசூசிகளை ஒழுங்குமுறைப்படுத்தினால் என்ன என்பது குறித்தும் சம்பந்தப்பட்ட இரு சாராருடனும் ஆலோசிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது. (அ)

## நடைபாதைக்கடைகள் பழைய சந்தைப் பகுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் பஸ்நிலையத்தில் உள்ள நடைபாதைக் கடைகள், சத்திரத்துச் சந்திப் பக்கமாக உள்ள பழைய சந்தைப் பகுதிக்கு மாற்றப்படும்.

புடைவை, 'பான்ஸி' பொருள்கள், பாத்திரக் கடைகள் என்பன ஆரம்பத்தில் அதாவது இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மாற்றப்பட உள்ளதாக அறியவந்தது.

அதன் பின்னர் ஏனைய பொருள்களை விற்கும் நடைபாதைக் கடைகளும், கட்டம் கட்டமாக பொருத்தமான இடங்களுக்கு மாற்றப்படும்.

யாழ் பஸ்நிலையத்தில் நடைபாதைக் கடைகள்பெருகி உள்ளதால் ஏற்படும் போக்குவரத்துக் கஷ்டங்களையும், சனநெரிசலையும் தவிர்க்கவே இந்த ஏற்பாடு என அறியப்படுகிறது.

## மாகாணசபை உறுப்பினர் கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூன் 2

மேல் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் நேற்று (வியாழன்) காலை கொழும்பில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வனாத்தமுல்லையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இத் தாக்குதலை நடத்தினர்.

சம்பவம் நடந்த சமயம் அவரது பாதுகாப்பு அதிகாரியும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். [உ-எ]

## மாமுனைப் பகுதியில் வழமை நிலை திரும்பியது

பச்சிலைப்பள்ளி, ஜூன் 2

வடமராட்சி கிழக்குப்பகுதியான நாகர்கோவில், மாமுனைப் பகுதிகளில் பதற்றம் நீங்கி நேற்று ஓரளவு வழமை நிலை திரும்பியது.

செம்பியன்பற்று தாளையடிக்கான போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

மாமுனையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது ஆறு இளைஞர்கள் பலியானதாகச் சொல்லப்படுகிறது.

இதேவேளை மாமுனையைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் அகதிகளாக செம்பியன்பற்று, தாளையடிப் பகுதிகளில் உள்ள தேவாலயங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளதாக அறியப்படுகிறது. (ஒ-117)

## கொழும்பில் நேற்றுக்காலை சம்பவம்:

# சிரேஷ்ட பொலீஸ் அதிபர் பெனட் பெரேரா சுட்டுக்கொலை!

## மனைவிக்கு காயம்; சாரதி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 2

சிரேஷ்ட பொலீஸ் அதிபர் பெனட் பெரேரா நேற்றுக் காலை இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெனட் பெரேரா பயணம் செய்த வாகனத்தின் சாரதியும் அப்போது மரணமானார்.

இச் சம்பவம் காலை 7.15 மணியளவில் கொழும்பில் இரத்மலானைக்கும் தெஹிவளைக்கும் இடையில் இடம்பெற்றது.

வாகனத்தில் மனைவியுடன் இவர் கடமைக்குப் புறப்பட்டுச் சென்றபோது இடையில் வீட்டில் இருந்து 300 யார் தூரத்தில் வாகனம் நிறுத்தப்பட்டது.

அருகில் உள்ள கடை ஒன்றில் பத்திரிகை வாங்குவதற்காக பெனட் பெரேராவின் மனைவி வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்றார். அச் சமயத்தில் அவ்விடத்தில் நின்ற இனந்தெரியாத நபர் ஒருவர் திரு. பெரேரா மீது சுட்டார்.

அதில் அவரும் அவரது சாரதியும் உயிரிழந்தனர் அவரது மனைவியும் காயமடைந்தார்.

இரகசிய புலன் விசாரணைத் திணைக்களத்தின் அதிபராக முன்னர் பணி புரிந்த திரு. பெனட் பெரேரா, இறக்கும் சமயம் ''விசேட முறைப்பாடுகள் பிரிவின்'' டைரக்டராக கடமை புரிந்து வந்தார்.

இப் பிரிவு தான் தீவிரவாத சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகிறது. (உ-எ)

### சுபநேரம்

02—06—1989
வைகாசி — 20
வெள்ளிக்கிழமை

சுப நேரம்:
05.52 முதல் 07.22 வரை
ராகுகாலம்:
10.22 முதல் 11.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
கார்த்திகை விரதம்.

## சாவகச்சேரி கடைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 2

சாவகச்சேரி நகரத்தில் உள்ள கடைகள் நேற்று திறக்கப்பட்டன.

கடந்த 24 ஆம் திகதி முதல் இக் கடைகள் மூடப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே. (ஒ-117-31-3)

## எரிந்த சடலங்கள் மீட்கப்பட்டன

பன்னல என்னும் இடத்தில் டிக்கெல வனப் பகுதியில் இனந்தெரியாத ஐந்து பேரின் சடலங்கள் எரியுண்ட நிலையில் பொலீஸாரினால் மீட்கப்பட்டன. (உ-எ)

## கர்ப்பிணிகள் படும்பாடு!

கொழும்பு, ஜூன் 2

தொண்ணூற்றி மூன்று கர்ப்பிணிகள் பிரசவத்திற்காகச் சேர்க்கப்பட்டிருக்கும் வார்ட்டில் 6 கட்டில்கள் மட்டுமே இருக்கின்றனவாம்.

எந்த ஆஸ்பத்திரியில் இந்த நிலை தெரியுமா? குருநாகல் அரசினர் ஆஸ்பத்திரியில்தான் இந்த நிலை!

கட்டில்கள் இல்லாததினால் சில சமயங்களில் கர்ப்பிணிகள் ,''ஸ்ரெச்சர்'' களிலும் குழந்தைகளைப் பிரசவிக்க வேண்டி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குழந்தையின் பெற்றோர் யார்? நீதிமன்றம் தீர்மானித்தது!

சென்னை, ஜூன் 2

ஒரு குழந்தைக்கு இரு தம்பதியர் உரிமை கொண்டாடினர். இறுதியில் மருத்துவ ஆய்வுகளின்படி குழந்தையின் பெற்றோர் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்தத் தீர்ப்பை சென்னை நீதிமன்றம் வழங்கியது.

ஐந்து வயது பெண் குழந்தை ஒன்றுக்கு தாங்களே பெற்றோர் என இரு தம்பதியர்கள் வழக்காடினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி விடயத்தை சட்ட மருத்துவ அதிகாரிகளின் கவனத்துக்கு ஒப்படைத்தார்.

வைத்திய அதிகாரிகள் பிறப்புரிமையியல் மருத்துவத்தின் அடிப்படையில்குழந்தையைச் சோதித்தனர்.

இறுதியில் பெருமாள்–காளியம்மன் தம்பதியரின் குழந்தையே அது எனக் கண்டு பிடிக்கப்பட்டது.

நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கியதும் அதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றைய வழக்காளியான அதிவீரபாண்டியனும் அவரது மனைவியும் நீதிமன்றத்தில் இருந்த குழந்தையைப் பாய்ந்து பறிக்க முயன்றனர். ஆனால் பொலீஸார் அதனைத் தடுத்துவிட்டனர்.

பிறப்புரிமையியல் அடிப்படையில் தாங்கள் எடுத்த முடிவு 99 99 விதம் சரியாகவே இருக்கும் என மருத்துவ அதிகாரிகள் அடித்துக் கூறியுள்ளனர். (உ)

## திருநெல்வேலியில் நேற்று 2 இளைஞர்கள் சூட்டுக்குபலி!

நேற்றுக் காலை திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த நா. ஆனந்தராஜா(வயது 17), ஏழாலை தெற்கைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது 17) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களது சடலங்கள் திருநெல்வேலியில் நூல் நிலையம் ஒன்றிற்கு அண்மையில் கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் நேற்று மோதல் சம்பவங்கள்

### துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி!

வடமராட்சி, ஜூன் 2

பருத்தித்துறையில் நேற்றுக் காலை மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிய வருகிறது.

இந்தச் சம்பவங்களின் போது ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை சுமார் 7-15 மணியளவில் கல்லூரி வீதியில் தாக்குதல் ஒன்று இடம்பெற்

[6ஆம் பக்கம் பார்க்க]

## பிஜி நாட்டு நீதிவான்களாக இலங்கைத் தமிழர்கள்

சுவா, ஜூன் 2

இலங்கையைச் சேர்ந்த மூன்று வழக்கறிஞர்கள் பிஜி நாட்டில் நீதிவான்களாக நியமிக்கப்பட்டனர்.

மூவரில் இரண்டு பேர் தமிழர்கள்; ஒருவர் சிங்களவர்.

திரு. வி. பி. சுந்தரலிங்கம் சிகாரோக்கா என்னுமிடத்தில் நீதிவானகப் பணிபுரிகிறார்.

'பா' என்னுமிடத்தில் திரு. ராமச்சந்திரன் ருத்ரநாதன் நீதிவானக முதலில் பணிபுரிவார். பின்னர் ராக்கிரகி என்னுமிடத்திற்கு மாற்றப்படுவார்.

திரு. ஜினதாஸ இலங்கசிங்கா லவுரோக்கா என்னுமிடத்தில் நீதிவானகப் பணிபுரிவார்.

இவர்கள் மூவரும் பிஜியின் பிரதம நீதியரசர் சேர் ரிமோசி ரிபூவகா முன் அண்மையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (எ)

### முச்சந்தி முரளி



தாய்மாருக்கு வந்த சோதனையைக் கண்டியளே......!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

விற்பனைக்கு பலவகையான பாம்ஸ் குரோட்டன்ஸ் சாடியுடன் 1. 6. 89 இல் இருந்து 15-06-89 வரை விற்கப்படும். சிதம்பரத்தை அஸ்பரகாஸ், எக்ஸ்சோரு பிறைட் ஒவ் யப்பான் என்பவையும் பொலித்தீன் பைகளில் விற்பனைக்கு உண்டு. பிளான்ட் பரைடைஸ் நேசரி, 152/2. கோவில் வீதி, யாழ்ப்பாணம். (11098)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் சேவற் குஞ்சுகள் 31ஆம், 1ஆம், 2ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும் (50 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ 3 50) இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (589)

(DEKALB பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் (COB'B) புறயிலர் குஞ்சுகள் (06-06-89) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல:09, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (590)

### SAI RAM

T.V Colour B & W 20'' பாவித்த குசினி அலுமாரிகள் கட்டில் சாப்பாட்டு மேசை கதிரைகள் Antana Pipe cycle Iron. SaiRam 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (11122)

### புலமைப் பரிசில் பரீட்சை

5ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை 03. 06. 89சனி, 3. 00மணிக்கு (தமிழ், கணிதம்) நடைபெறும் விண்ணப்பங்களைப் பதிவுசெய்யவும். ஆண்டு 3, முதல்ஆண்டு 11வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்விநிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (702)

### தவறிவிட்டது

தம்பையா இராமச்சந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை (453491900V) 31-5-89 அன்று ஆஸ்பத்திரி, விக்டோறியா வீதிகளுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (708)

A. Varatharajah என பெயரிட்டு கையெழுத்திட்ட பிரிட்டிஸ் போஸ்டல் ஓடர் No.0319-483335,36-25-5-89 இல் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (709)

97 சிறி 4095 இலக்க சாளி சைக்கிளின் புத்தகமும் லைசன்சும் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கைரோஸ் உரிமையாளர் சிறி இல: 1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (710)

### கல்வி

G. C. E மற்றும் லண்டன் பரீட்சைகளுக்கான ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலம் ஆகியவற்றுடன் Spoken English [ஆங்கில சம்பாஷணை) வகுப்புக்கள் புதிய பிரிவு5/6/89 இல் ஆரம்பமாகின்றன. 173, வேம்படிவீதி, யாழ்ப்பாணம். (714)

## வட்டு இந்து இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 2 வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை 2ஆம் திகதி அதிபர் திரு .S. டாஸ் தலைமையில் நடைபெறுகின்றது. (க)

## ★ திறப்பு விழா ★

02. 06. 1989 வெள்ளிக்கிழமை (இன்று)
மாலை 5. 52 மணி முதல் 7 - 22 வரை
வரும் சுப வேளையில்
இல. 153, பிரதான வீதியிலுள்ள

## ரியூலிப்ஸ் கூல்பார்

மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும்.

**சகலவிதமான சாப்பாடு வகைகளும்**
ஓடர்களுக்கு குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கப்படும்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்:
S. M. பீற்றர்பிள்ளை அருள்நேசம். [11118]

## சவூதியில் உடன் வேலை

மெக்கானிக் உதவியாளர் — 60 இடங்கள்
எலக்ரிசியன் உதவியாளர் — 60 இடங்கள்

தகைமை:- சுமார் இரண்டு வருட அனுபவம்
ஆங்கில அறிவு ஓரளவு தேவை

**சம்பளம்:- 600 - S.R.**

உடன் தொடர்பு கொள்ளவும்.

K. கந்தசாமி (மாஸ்டர்)
''யோகலட்சுமி''
அராலி வடக்கு (சேச்சடி)
வட்டுக்கோட்டை.
(842)

## PROFESSIONAL COURSES
## CIMA - IDPM - AAT - IAB
## PITMANS BOOK - KEEPING

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 03 - 06 - 1989**

தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே பொருந்திய போதனையில் சாதனை புரியும் முன்னணி விரிவுரையாளர்களைக் கொண்ட மாணவ சமுதாயத்தின் இதயம் கவர்ந்த ஒரே கல்வி நிறுவனம்:

# CANTABIA INSTITUTE

No. 2', MAIN STREET,
JAFFNA.

(C/2677)

## திருமண அறிவித்தல்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு வே. க கந்தையா தம்பதிகளின் புத்திரன் ஜெகதீசனுக்கும் அமரர் டாக்டர் ந. இராசரத்தினம் திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம் தம்பதிகளின் புத்திரி சாந்த கௌரிக்கும் 21-04-1989-இல் திருச்சி திருவானைக்கா ஸ்ரீ சம்புகேஸ்வரர், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் திருமணம் நிறைவேறியதை அன்புள்ளங்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
[C/2785]

தகவல் :- மணமக்களின்
பெற்றோர்கள்.

பிரயாணம்.. பிரயாணம்.. பிரயாணம்..

# 'M' THREE TRAVEL

வழங்கும்

## ★ சவூதி அரேபியா பிரயாணம்

| | | | |
|---|---|---|---|
| (i) | SUPERINTENDENT ROAD & GROUNDS | 1 வெற்றிடம் | 2200 SR |
| (ii) | CREW CHIEF | 9 வெற்றிடங்கள் | 900 SR |
| | (A) ELECTRICAL TECHNOLOGY (B) CIVIL WORKS (C) MECHANICAL TECHNOLOGY (D) HORTICULTURE (E) AGRICULTURE | மேற்படி தொழிலில் அனுபவமுள்ளவர்கள் | |
| (iii) | SHIFT LEADER [POWER PRODUCTION PLANT] | 2 வெற்றிடங்கள் | 1050 SR |
| (iv) | DRAFTSMAN | 1 வெற்றிடம் | 700 SR |
| (v) | CONTROL OPERATOR [ELECTRICAL SWITCHGEAR OF POWER PRODUCTION PLANT] | 3 '' | 950 SR |
| (vi) | HORTICULTURIST | 1 '' | 700 SR |
| (vii) | MECHANIST | 1 '' | 650 SR |
| (viii) | MASON | 9 '' | 550 SR |
| (ix) | SEWAGE PLANT OPERATOR / MECHANIC | 6 '' | 800 SR |
| (x) | PAINTER | 12 '' | 550 SR |
| (xi) | CARPENTER | 5 '' | 600 SR |
| (xii) | LOCKSMITH (பூட்டுத் திருத்துபவர்) | 1 '' | 650 SR |
| (xiii) | SHEET METAL WORKER | 2 '' | 700 SR |
| (xiv) | SWIMMING POOL OPERATOR / MECHANIC | 1 '' | 600 SR |
| (xv) | UPHOLSTERER | 1 '' | 650 SR |
| (xvi) | WATER TREATMENT PLANT OPERATOR | 1 '' | 800 SR |
| (xvii) | WELDER / METAL FABRICATOR | 1 '' | 650 SR |
| (xviii) | HANDYMAN | 3 '' | 900 SR |
| (xix) | GARDENER | 23 '' | 350 SR |
| (xx) | CONTROL CLERK / EXPEDITOR | 2 '' | 600 SR |

PASS PORT [கடவுச் சீட்டு] BOND [பொண்ட்] என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ நம்பிக்கை! ★ நாணயம்!!

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL,

தலைமை அலுவலகம்:
'இந்திர பவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக்குடியமர்வு:

## நிவாரணம் பெறாதவர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படும்

புதுக்குடியிருப்பு, ஜூன் 2 புதுக்குடியிருப்பு கிராம எல்லைக்குள் இதுவரை காலமும் மீளக்குடி அமர்வு நிவாரணமான ரூபா 2000 பெறாத குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகின்றார்.

இதுபற்றி உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

பாதுகாப்பு பிரதேச எல்லைக்குள் உள்ள குடும்பங்களுக்கு மீளக்குடியிருப்பு நிவாரணமாக ரூபா 2000/- வழங்கப்படமுடியாது உள்ளது.

ஆகவே அவர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் முன்வந்துள்ளார்.

இதன்படி ஒரு குடும்பத்தில் 1 அங்கத்தவர் மட்டும் இருந்தால் அவருக்கு மாதாந்தம் 3.70 கிலோ அரிசியும் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு 37.5 கிலோ அரிசியும் வழங்கப்படும்.

இப்படி அவர் தெரிவித்தார். [ச-126]

## தென்இந்திய யாத்திரை

ஆனி உத்தரம் - சிதம்பரம் தேர்!
ஆனி திருமஞ்சன தரிசனத்தை இட்டு
தென் இந்திய ஸ்தல யாத்திரை
**புறப்படும் திகதி: 01-07-1989**
முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்

தலைமைப் பணிமனை:

# துர்க்காதேவி ரூர்ஸ்

இல. 6, நவீனசந்தை மேல்மாடி
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
**யாழ்ப்பாணம்.**

தரிசிக்கும் தலங்கள்

கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருச்சி, வேதாரணியம், திருநள்ளாறு. வேளாங்கண்ணி, தஞ்சாவூர், திருக்கழுக்குன்றம், மருதமலை, திருவாரூர், திருப்பதி, புட்டப்பர்த்தி, திருக்காளாத்தி, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, ஆறுபடை வீடுகள் ...... இன்னும் பல.

குறிப்பு :

- இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் அனுமதி பெற்றுத் தரப்படும்.

விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்.
**பாஸ்போட் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.**
(C/2781)

முதலாவது
## பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் தாஸ்கான் சாபீக்கான்

தலைமன்னார் பியரில் வசிக்கும் தாஸ்கான் ருபீனா தம்பதிகளின் அருமைப் புதல்வன் சாபீக்கானை வாப்பப்பாமார், வாப்பம்மாமார், மாமாமார், மாமிமார், சாஜ்ஜாமார், யாழ்ப்பாணம் காந்திராஜ் அங்கிள் குடும்பத்தினர் பல்லாண்டுகாலம் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

(11123)

# நெடுந்தீவுக் கடலில் மீண்டும் வெளிநாட்டு இழுவைப் படகுகள்

நெடுந்தீவு, ஜூன் 2

சிறிய இடைவெளிக்குப்பின் வெளிநாட்டு இழுவைப்படகுகளின் நடமாட்டம் மீண்டும் நெடுந்தீவுக் கடலில் இடம் பெறத் தொடங்கியுள்ளது.

பெருந்தொகையான இழுவைப் படகுகள் தீவின் தென் பகுதியிலும் வடக்குக் கடலிலும் காணப்படுகின்றன.

வெளிநாட்டு இழுவைப் படகுகளின் நடமாட்டத்தைத் தொடர்ந்து நெடுந்தீவு மீனவர்கள் தமது ஆழ் கடல் மீன்பிடித் தொழிலை நிறுத்தியுள்ளனர்.

தீவின் கரையோரப் பகுதிகளில் சிறுதொழில்களில் மட்டுமே அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இழுவைப் படகுகளினால் தமது வலைகள் சேதமாகிவிடும் என்ற அச்சத்தினாலேயே உள்ளூர் மீனவர்கள் தமது தொழில்களைச் செய்ய முடியாதிருப்பதாகக் கூறப்படுகிறது. (ச-111)

## டிப்போவில் கிடக்கும் பஸ்கள்

வடமராட்சி, ஜூன் 2

இருபதுக்கு அதிகமான பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி பருத்தித்துறை டிப்போவில் கிடக்கின்றன. (க - 160)

## மா.ச.உறுப்பினர் வீட்டின் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 2

வடமேற்கு மாகாண சபை உறுப்பினர் சமனதிலக நத்திஹவின் நிக்கவரட்டிய வாசஸ்தலத்தின் மீது கடந்த ஞாயிறு இரவு கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இதற்கு கைக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. அப்போது காவலுக்கு நின்ற தேசிய துணைப்படையைச் சேர்ந்த இரண்டுபேர் உயிரிழந்தனர். உறுப்பினரின் ஜீப்பும் தீக்கிரையாக்கப்பட்டது. அவரது வீடும் சேதமடைந்தது,

தாக்குதல் சமயம் உறுப்பினர் வீட்டில் இருக்கவில்லை. [ஒ-எ]

## ஆசிரியைகளுக்கு 3 மாத சம்பளத்துடன் பிரசவ லீவு

### 3 அமைச்சுகள் பரிசிலிக்கின்றன

கொழும்பு, ஜூன் 2

அரச சேவையில் உள்ள ஆசிரியைகளுக்கு மூன்று மாத கால சம்பளத்துடனான பிரசவ கால விடுமுறை வழங்குவது பற்றி கல்வி அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு ஆகியன கூட்டாகப் பரிசிலனை செய்து வருகின்றன.

அரச சேவையில் உள்ள தற்காலிக ஊழியர்கள், நாள் சம்பள ஊழியர், சமயாசமய ஊழியர், சிற்றூழியர் தவிர்ந்த ஏனைய பெண் ஊழியர்களுக்கு முழுமாதச் சம்பளத்துடனான பிரசவ லீவு வழங்கப்படும் என்று வெளியான சுற்று நிருபத்தைத் தொடர்ந்து எழுப்பப்பட்ட பிரச்சினை காரணமாகவே இப்பரிசிலனை இடம் பெற்று வருகிறது. (ஒ-எ)

## அக்குரஸ்ஸவில் பிரதம பிக்கு சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 2

அக்குரஸ்ஸவில் உள்ள பௌத்த விகாரை ஒன்றுக்குள் பலவந்தமாக நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த பிரதம பிக்கு அக்குருத்தோட்ட தர்மரத்தின தேரரைச்சுட்டுக்கொன்றனர்.

விகாரையில் இருந்த பொருள்களும் கொள்ளையிடப்பட்டன. (ஒ-எ)

## அதிபர் - அதிகாரிகள் உறவு பாடசாலை வளர்ச்சிக்கு உரமாகும்

### பிரியாவிடை விருந்தில் உரை

மானிப்பாய், ஜூன் 2

''நாம் அன்பு ஆதரவு நட்பு மனப்பான்மையுடன் வாழப் பழக வேண்டும்- கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் தமது உறவைப் பாடசாலையின் உள்ளேயும் வெளியேயும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ் உறவு வலுப்பெற்று வளரின் அது பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமாக அமையும்''

மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பாடசாலை அதிபர்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

கடந்த பதின்மூன்று ஆண்டுகள் மானிப்பாய் கல்வி வட்டார அதிகாரியாகக் கடமையாற்றி கிளிநொச்சி கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச்செல்வதை முன்விட்டு மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலை அதிபர்கள், தேநீர்விருந்தொன்றை வழங்கி கௌரவித்த போதே அவர் இவ்வாறு அதிபர்களுக்குப் புத்திமதி கூறினார்.

மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தனஞ்செயன் மேலும் கூறியதாவது-

பாடசாலைகள் நன்றாக இயங்க வேண்டும், மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் சிலருடன் சிலவேளைகளில் யான் கண்டிப்பாக நடந்ததுண்டு.

ஆனால் எவரினதும் உயர்வுக்கு தடையாக எனது சேவைக்காலத்தில் பணியாற்றியது கிடையாது.

வேலையை விட்டுப்போனாலும் அன்பு-அன்னியோன்னியநிலை விட்டுப்போகாமல் இருக்கவேண்டும்.

அதிபர்சன் ஆசிரியர்களின் குறைகளை கோபமாகக் கொள்ளாமல் அன்புடன் அவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டும். இப்படி அவர் கூறினார்.

அதிபர்கள் சார்பில் பேசிய தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு. அரு. வை. நாகராஜன் ''தூய உள்ளத்தோடு- கடமையுணர்வோடு -மாணவர்களின் கல்விநலனில் அக்கறை கொண்டு அயராது உழைத்த எமது கல்வி அதிகாரி எம்மோடு இருக்க வேண்டிய காலத்தில் எம்மை விட்டுப்பிரிந்து செல்வது கவலைக்குரியதாகும்'' என்றார்.

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர் திரு. திருநாவுக்கரசவும் (நாகேந்தன்) உரையாற்றினார். (ச - 90)

## ரயில்வே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 2

ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் தலையிட்டு தீர்த்து வைத்தார்.

செவ்வாய்க்கிழமை இரவு முதல் ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தால் கொழும்பு ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

புதன்அன்று பேச்சுக்களை அடுத்து ரயில்சேவைகள் வழமைக்குத் திரும்பின. (ஒ-3)


யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. காரைநகர்,
(யா/ காரைநகர் இந்துக்கல்லூரி, காரைநகர்)

**பழைய மாணவர் சங்க புனருத்தாரணம்**

மேற்படி பாடசாலையில் கற்றவர்கள் தயவுசெய்து தங்களது முழுப்பெயர், தனிப்பட்ட முகவரி, தொழில், அலுவலக முகவரி, கல்வி கற்ற ஆண்டுகள் இன்ன பிற விபரங்களை 15. 06. 89க்கு முன்னர் அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அமைப்பாளர்:
— பழைய மாணவர் சங்கம்

அதிபர்
யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.
காரைநகர்.
02. 06. 89 [834]



**Professional Exams**

| | | | Commencement |
|---|---|---|---|
| C. I. M. A. | Stage 1 | | 3 - 6 - 89 |
| | Stage 2 | | 10 - 6 - 89 |
| I. D. P. M. | Part 1 | | 3 - 6 - 89 |
| | Part 2 | | 17 - 6 - 89 |
| A. A. T. | (Sri Lanka) | Stage 1 | 3 - 6 - 89 |
| I. A. B. | (All Stages) | | 5 - 6 - 89 |
| BOOK-KEEPING | (Pitmans) | | 5 - 6 - 89 |
| COMPUTER | (Basic) | | 27 - 5 - 89 |

An Electronic Calculator will be Issued FREE for CIMA & IDPM Students

Panel of Lecturers include:
JEYARATNAM, KAILAYAPILLAI, KATHIRGAMANATHAN, NAVARENDRAN, PUSHPA, SIVAPATHASUNDARAM. & CAMPUS LECTURERS

NOTE; I. D. P. M, & I. A. B. Exams will be held in Jaffna Centre

★ Qualified, Experienced & dedicated Panel of Lecturers
★ Free Cyclostyled Notes
★ Moderate Fees
★ Registration with London Institutes will be handled by us

Pay only Rs 100/- on admission, Satisfy yourself about our standard of lectures and pay the balance fees later

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION,**
(Pioneers in Accountancy Studies)
16, 3rd CROSS STREET,
(Near O. L. R. Church)
JAFFNA. [சி/2779]



வர்ண ஜாலங்கள் காட்டும்

# டேட்ரோனிக்ஸ்



நம்பமுடியாத விலையில் கலர் டி. வி. ரூ. 9995/- முதல்

டேட்ரோனிக்ஸ் உலகில் வர்ணக் கோலங்கள் களிநடம் புரிகின்றன. உங்கள் ஒவ்வொருவரின் வசதிக்கும் உகந்த விலையில் அதிநவீன தொழில் நுட்பச் சிறப்புகளுடன் இரண்டு அற்புதமான வர்ணத் தொலைக்காட்சிகளை டேட்ரோன் படைத்துள்ளது. வர்ணத்தை நாடுங்கள். டேட்ரோனிக்ஸ் நலனை அனுபவியுங்கள்.

டேட்ரோன் 14" கலர்
- நவீன எலெக்ட்ரோனிக் ரியூனிங்
- PAL/SECAM/ தன்னியக்கம்
- வோல்டேஜ் ஒருநிலைப்படுத்தி 90V — 260V
- UHF/VHF
- தன்னியக்க நுட்ப ரியூனிங்

டேட்ரோன் 20" கலர்
- VHF UHF
- PAL/SECAM/ தன்னியக்கம்
- ஒரே தொடுகையில் தெளிவான படம்
- ஒளிக்கதிர் வடி கண்ணாடி
- 4 ஒலிபெருக்கி அமைப்பு
- வோல்டேஜ் ஒருநிலைப்படுத்தி 90V — 260V

**ஹேலீஸ் வழங்கும் டேட்ரோன்**

வசதியான விலையில் நவீன எலெக்ட்ரோனிக்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜேரா ரவல்ஸ்

★ வெற்றிடங்கள் ★

சவூதி அரேபியா (Saudi Arabia)

HOUSE MAIDS பெண்கள்
LABOURERS ஆண்கள்
CLEANERS ஆண்கள்

தைவான் (Taiwan)

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மூன்று கிழமைகளில் அனுப்பிவைக்கப்படுவார்கள்

ஜேர்மனி (Germany) க்குப் பிரயாணம் செய்ய விரும்புவோர் (16 வயதிற்கு உட்பட்டவர்களும் மேற்பட்டவர்களும்) தாமதியாது எங்கள் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

சுஜேரா ரவல்ஸ்
21, வேம்படி றேட்,
யாழ்ப்பாணம்.

(C/2751)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### திரு. கதிர்காமு வேலுப்பிள்ளை

ஜனனம்: 12 - 04 - 1907

மரணம்: 14 - 05 - 1988

அன்பான அப்பா!
பண்பான பாசத்துடன்
சிரிக்சச் சிரிக்கப் பேசி எமை
சிந்திக்க வைத்த நீங்கள்
சென்ற இடம் ஏதோ?
ஓராண்டு சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம்மை வாட்டுகின்றது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி.

(836)

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 04 – 12 – 1927

உதிர்வு: 03 – 06 – 1988

### திரு. தொம்மைப்பிள்ளை சவரிமுத்து

(முன்னாள் விளையாட்டுத்துறை அதிகாரி–பளை)

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் நல்வழி காட்டி எந்தவித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்றாயினும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக போயிட்டி இளவாலை ஊர்த்து மாதா ஆலயத்திலும், தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்திலும் 03 – 06 – 89 காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தாளையடி.

[829]


★ றேடியன்ற் கல்வி நிலையம் ★

புங்கன்குளம், அரியாலை.

"RADIANT DAY - 1989"

தினம் சார்பாக பின்வரும் இரண்டு போட்டிகள் நடத்தவுள்ளோம்.

✶ அமரர் செ. கந்தையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர் மென்பந்து கிறிக்கற் போட்டி

✶ பொது அறிவுப்போட்டி குழுக்களுக்கிடையே நடத்தப்படும்.

09- 06- 1989க்கு முன் விண்ணப்பிக்கவும்-
விபரங்களை நிலையத்தில் பெறுக. (821)


யாழ் / நெல்லியடி மத்திய
மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் 1989

காலம்: 1989 - 06 - 11 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9.00 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

தலைவர்: திரு. எஸ். றேய் காந்தராஜ் (அதிபர்)

பெற்றோர், பழைய மாணவர், பாடசாலை நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. செல்வராசா,
கௌரவ செயலாளர்.

(சி/2778)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி



### செ. குணசிலன்

அன்னை மடியில்: 23. 01 1964

ஆண்டவன் அடியில்: 18. 04. 1989

"அம்மா" என்ற உன் அலறலும் "மகனே" என்ற என் அலறலும் அர்த்தமற்றதாகி விட்டன. குணசிலா! உன்னைப் பெற்று வளர்த்து பள்ளிப் படிப்பினை முடித்து எம் துயர் தீர்ப்பாய் என்றிருந்தோம். நீ திரும்ப முடியாத இடம் ஏகிவிட்டாய்! உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு என்றுமே நீங்கா.

உமது ஆத்ம சாந்திக்காக எம் கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

அம்மா, அண்ணா,
அக்கா, அத்தான,
மருமக்கள்.

கல்வியங்காடு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/2675)

### சென் பெனடிக்ற் விளை. போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 2

இன்று வெள்ளிக்கிழமை காலை நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் அருட் செல்வி லீசா தலைமையில் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயக மூர்த்தி கலந்து கொள்வார். (க - 13)

### அப்போதிக்கரீஸ் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் உதைபந்தாட்டக் கழகத்தினால் அப்போதிக்கரீஸ் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (ச)

### வடமராட்சி கோட்டக்கல்வி விளை. போட்டி

பருத்தித்துறை, ஜூன் 2

வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவினுள் அடங்கும் எட்டுக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி இன்று 2ஆம் திகதி காலை 8-30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த விளையாட்டுப் போட்டி வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொன்னம்பலம் வீரபத்திரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய முன்னாள் வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக உடற் கல்வி அதிகாரி திரு. எஸ். அருணகிரிராஜா கலந்து கொள்வார்.

### தேடுதல்

கரவெட்டி, ஜூன் 2

கரவெட்டியைச் சேர்ந்த இராஜ கிராமம், இடைக்குறிச்சு பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. [ஒ-70]

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி





### V. சதாசிவம்

[இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்]

அன்னையின் மடியில்: 04 02 – 1922
தரணியின் மடியில்: 05 – 06 – 1986

சதாசிவம்

### சிவானந்த மூர்த்தி

(பீட்டர் அண்ணச்சி)

அன்னையின் மடியில்: 04 – 05 – 1953
தரணியின் மடியில்: 11 - 03 - 1986

திதி: 02 - 06 - 1989

நாட்டுக்கொரு நல்மகனை
கொடுத்துவிட்டேன் என்ற
பெருமையுடன்
அவனைப் பின் தொடர்ந்து
மாசம் மூன்றுக்குள் நீங்கள் சென்று
ஆண்டும் மூன்று ஆச்சே

என்றும் உங்களை நினைவு கூர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாடு நலம்பெற ஓடி உழைத்த
உத்தமனே மூர்த்தி
பாடுபட்டும் பலன் காணும் முன்னர்
ஐந்தோழருடன்
பாதி வழியில் மறைந்தீரோ?
கதறி அழுதும்
உன் பொன் உடலைக் காணாது
நினைத்து உருகுகின்றோம்

தாய், சகோதரங்கள்,
மருமக்கள்.

[சி-2766]

## மூன்றும் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### திரு. செ. கனகராசா

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

அன்னை மடியில்: 10- 01- 1924

ஆண்டவன் அடியில்: 05- 06- 1986

திதி: 02– 06- 1989

மூன்று ஆண்டு ஓடி மறைந்தாலும்
முகவுறை இல்லாமல் ஏங்குகின்றோம்
தேடுகிறோம் உமது திருமுகத்தை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கனகவாசா"
விநாயகர் வீதி,
வட்டக்கச்சி,

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(643)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராஜதுரை ராஜேந்திரபோஸ்

(போஸ்)

(யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவன்]

மலர்வு: 3 - 12 - 1969

மறைவு: 25 - 5 - 987

திதி: 2 - 6 - 1989

எங்கள் அன்புச் செல்வ மகன் போஸே! நீர் எங்களை எல்லாம் ஆறாத்துயரில் தவிக்க விட்டுச் சென்று ஈராண்டு காலம் சென்று விட்டது. உமது இலட்சியம் படிப்புஎல்லாம் கனவாகப் போய்விட்டது. உம்மைப்பாசத்தோடு பார்த்து வந்த முகத்தை பாதியிலே காலன் பறித்து விட்டானே மகனே! உம்மை மறக்க முடியாமல் இதயம் துடிக்கின்றது. எம் உயிர் எம்மை விட்டு போகும்வரை எங்கள் நெஞ்சில் இருந்து உம் நினைவு மறையாது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் தவிக்கும்:
அப்பா, அம்மா, சுபாஸ் அண்ணா [ஜேர்மனி]
அருமைத்தங்கை மணிமாலா, தம்பிராஜ்கண்ணா,
[ஜேர்மனி] தனதாஸ், உறவினர்கள்,
நண்பர்கள்.

"சரோஜா தங்கமாளிகை"
சங்கத்தானை. சாவகச்சேரி.

[832]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை என்ப வாய்மைக் குடிக்கு

**பொருள்:**

உண்மையான உயர்குடியில் பிறந்தவர்க்கு முகமலர்ச்சி ஈகை, இனியசொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22074
02 - 06 - 1989 [illegible]

## நூல்நிலைய நிதியம் வேண்டும்

நினைவஞ்சலிகள் நிறைந்த காலம் இது. சாதாரண மரணங்களை விட, விசேஷ ஞாபகார்த்தம் வைக்க வேண்டிய மரணங்கள் அதிகம். அதனால், வீட்டுக்கு வீடு, தமது இரத்த உறவினர்களுக்கு நினைவஞ்சலிகள் ஏராளமாகி விட்டன.

மனிதர்களுக்கு மட்டும் என்ன? ஸ்தாபனங்கள் நிறுவனங்களை நினைவு கூர வேண்டிய தேவையும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. இந்த வகையில் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்தின் 'நினைவு தினம்' நேற்று - ஜூன் மாதம் முதலாம் திகதியாகும். அதாவது யாழ்ப்பாண பொது நூலகம் தீ வைத்து அழிக்கப்பட்டு நேற்றுடன் எட்டு வருடங்கள் முடிந்து விட்டன.

சிங்களப் பேரினவாதம் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொண்டமிகப்பெரிய பண்பாட்டுப்படுகொலைகளில், யாழ்ப்பாண நூலகம் அழிக்கப்பட்டதும் ஒன்றாகும். அதே போல அந்த வடு மனித சரித்திரம் உள்ள வரை அழியப் போவதும் இல்லை.

தென் ஆசியாவின் மிகப் பெரிய நூல்நிலையங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பொது நூலகம், தேடுதற்கரிய 97,000 அரும்பெரும் நூல்களுடன், தீ வைத்து நாசமாக்கப்பட்ட வேதனை ஈழம் வாழ் தமிழர்கள் வாழும் வரை அவர்கள் நெஞ்சங்களை நெருடிக் கொண்டே இருக்கும்.

வடபகுதிக்கு மட்டும் அன்றி ஈழத் தமிழ்ப் பிரதேசங்கள் முழுவதற்குமே, அறிவுப் பெட்டகமாகத் திகழ்ந்த யாழ். பொது நூலகத்தைச் சாம்பராக்குவதன் மூலம், தமிழர்களின் அறிவுத் தேடலுக்குத் தடை போடலாம் என்று தீயசக்திகள் நினைத்தனவோ என்னவோ! அவர்களின் அந்த எண்ணம் முற்றாக ஈடேறுவது கடினம். எனினும் யாழ் நூலகத்தின் இழப்பு தமிழர்களின் இரண்டு மூன்று சந்ததிகளுக்குப் பெரும் இழப்பு என்பதை மறந்துவிட முடியாது.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இருந்தது போன்ற ஒரு நூலகத்தை — முழு அளவிலான — பூரண வசதிகள் கொண்ட நூலகத்தை — நிர்மாணிப்பதும், எரிந்து போனவற்றுக்குப் பதிலான நூல்களைத் தேடிச் சேர்ப்பதும் நினைப்பது போல, சொல்வது போல, அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. மலையனைய சவால் எனலாம்.

[illegible] தீயினால் வெந்துபோன நூல்கள்போக, இடிந்து விழுந்த கட்டடப் பகுதிகள் போக, எஞ்சியவையும் இராணுவ நடவடிக்கைகளால் முற்றாகத் தரைமட்டமாகி விட்டன. எனவே எட்டு வருடங்களுக்கு முந்தி இருந்தது போன்ற ஒரு பூரணத்துவமான நூல்நிலையத்தை உருவாக்க — கட்டடங்களை நிர்மாணிக்க, நூல்களைச் சேர்க்க — வருடங்கள் பல ஆகும். போதிய நிதி, உரிய வகையில் திட்டமிடல், கூட்டுமுயற்சி, பலரின் மனம் விரும்பிய உழைப்பு, ஆகிய அனைத்தும் குறைவின்றிச் சரிவரத் தேவை.

இவை எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் கண்டுபிடிப்பது என்பது கஷ்டமானது. ஒன்று இருந்தால் மற்றது இருக்காது, பணிபுரிய வருவோர் ஆளுக்கு ஒரு பக்கம் இழுத்தல் ஆகிய நடைமுறைக் கஷ்டங்கள் காரணமாகப் புதிய நூல் நிலையம் ஒன்றை உருவாக்க ஆண்டுகள் பல செல்லும் என்பதும் தெளிவாகும்.

எவ்வாறாயினும், எரிக்கப்பட்ட நூல் நிலையத்திற்குப் பதிலாகப் புதிதாக ஒன்று உருவாக்கப்பட்டே ஆக வேண்டும். இதனை அரசாங்கமே முன்வந்து, முன்னெடுத்துச் செல்ல வேண்டும். விதைத்த வினைக்குப் பிராயச்சித்தம் செல்வதுபோல யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளையும் கொண்ட புதிய நூல்நிலையம் ஒன்றை எழுப்புவதற்கு அரசு ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு நேர்ந்த அழிவு குறித்து விசாரித்த லயனல் பெர்ணாண்டோ குழு, ஒரு கோடி ரூபா நஷ்டஈடு வழங்கச் சிபார்சு செய்திருந்தது. ஆனால் அந்தத் தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை. அப்போதைய ஒரு கோடி இப்போது பத்துக் கோடியாகும். அதனை ஆரம்ப நிதியாக வைத்து, புதிய நூலகத்தை உருவாக்கும் பொறுப்பை யாழ்ப்பாணம் மாநகர சபையிடமே அரசு ஒப்படைக்கலாம் அல்லவா?

புதிய நூலகத்தை எழுப்புவதற்கான ஒரு நிலையத்தையும் ஆரம்பித்து, அரசு மேலும் பண உதவி செய்யலாம். அரசு இது குறித்து உண்மையான அக்கறை செலுத்துமா?

## ஆச்சியைப் போய்ப் பாரடா!

எடுப்பு

ஆச்சியைப் போய்ப் பாரடா நயினையிலே
அருள் ஆட்சி செய்யும் எங்கள் - நாக (ஆச்சி)

தொடுப்பு

மாட்சிமிகுந்த அரும் காட்சி தரும் நிழல்
ஓச்சி வளர்வேம்பின் சாட்சி - கடல் நடுவே (ஆச்சி)

முடிப்பு

மூர்த்தி தலம் சீர்த்திபெற ஓங்கும்;
கீர்த்தி மிகுந்த தீர்த்தம் நலம் ஏத்தித் தினம் செய்யும்
நேர்த்தி பெருகவரும் பேத்தி; நாகமுடன்
போற்றிப் பணியவரம் ஆக்கித் தரும் கருணை
(ஆச்சி)

**நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை.**

(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில் கொடியேற்றம் 05 - 06 - 1689)

## ஜனாதிபதியைச் சந்திக்க முயன்று தோற்றவர் செய்த சாகஸம்

ஜோர்ஜ்டவுன், ஜூன் 1

கயானா ஜனாதிபதி டெஸ்மண்ட் ஹொய்டேயை சந்திக்க 37 வயதான இனந்தெரியாத நபர் முயற்சித்தார்.

அது தோல்வியில் முடியவே அந்த நபர் தலைநகர் ஜோர்ஜ்டவுனில் உள்ள மிருகக்காட்சிச்சாலைக்குள் பலவந்தமாகப் புகுந்தார்.

சிங்கங்களை அடைத்துவைத்து இருந்த கூண்டின் கதவைத் திறந்து விட்டார்.

உள்ளே இருந்த இரண்டு சிங்கங்கள் வெளியே ஓடின பின்னர் அந்த நபர் மரப் பலகையால் அங்கு வந்த பொலீஸாரைத் தாக்கத் தொடங்கினார்.

பொலீஸார் அந்த நபரை அவனது காலில் சுட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

'விடுதலை' பெற்ற சிங்கங்கள் இரண்டையும் மீண்டும பிடிக்க பொலீஸார் முயற்சித்தனர். முடியாமற்போகவே இரண்டு சிங்கங்களும் சுட்டுக் கொல்லப்பட்டன.

மிருகக்காட்சிச்சாலை பொறுப்பாளர் லெஸ்லி ஜுபிடர் இச்சம்பவம் பற்றிச்சொன்னதாவது:

அந்த நபர் சிங்கத்தின் கூண்டுக்கதவைத் திறக்க எத்தனித்தார். அப்போதுஅவனை என்ன செய்கிறாய்? என்று கேட்டேன்.

''ஏப்ரல் 26 முதல் ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சித்து வருகிறேன். முடியவில்லை. சிங்கங்களை வெளியே விட்டால் ஜனாதிபதி அழைப்பார் என்று நம்புகின்றேன்'' என்று அவன் பதிலளித்தான்.

இப்படிச் சொன்னார் லெஸ்லி ஜுபிடர். [எ]

## சீதனக் கொலைகளுக்கு மரணதண்டனை வேண்டும்

### தமிழக பிரதம நீதியரசர் யோசனை

சீதனப் பிரச்சினையில் பெண்களைக் கொல்பவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் என சென்னை பதில் பிரதம நீதியரசர் திரு. எஸ். மோகன் தெரிவித்தார்.

சென்னையில் கடந்த திங்கட்கிழமை நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் கூறியதாவது:-

சீதனக் கொலைகளுக்கு மரணதண்டனையைத் தவிர வேறு தண்டனை வழங்கப்படக் கூடாது.

சீதனம் கொண்டுவராததற்காக நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான முறையில் அப்பாவிப் பெண்களைக் கொல்பவர்களுக்கு மரணதண்டனையைத் தவிர வேறு தண்டனை பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க முடியுமா? — இப்படி பிரதம நீதியரசர் திரு. மோகன் கேட்டார். (ஒ-எ)

## மன்னிப்புச் சபை கண்டனம்

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் வசிக்கும் பலஸ்தீனியர்களைக் கைது செய்து விசாரணையின்றித் தடுத்து வைக்கும் இஸ்ரவேல் அரசின் நடவடிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது. (எ)

## சீன மாணவருக்கு ஆதரவாக பறக்கும் புலிப்படை!

பீக்கிங், ஜூன் 01

பீகிங்கில் மாணவருக்கு ஆதரவாக மோட்டார் சைக்கிளில் பிரசாரம் மேற்கொண்டு சென்ற 'பறக்கும் புலிகள் படையணி' (Flying Tiger Brigade) யின் 11 தலைவர்களை சீனப் பொலீசார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இந்த அணியைச் சேர்ந்த 400 பேர் மோட்டார் சைக்கிளில் நகர் முழுவதும் சென்று பிரசாரம் செய்தனர்.

இதனிடையில் பிரதமர் லீபெங் தென் சீனாவில் இருந்து வெளிவரும் மோர்ணிங் ஸ்டார் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில்,

''மாணவர் போராட்டத்துக்குப் பின்னால் அமெரிக்கா இருப்பதாக சந்தேகம் உள்ளது. அது பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும்'' என்றும் தெரிவித்திருந்தார் (எ)

ஜப்பானைப் போன்று

## அமெரிக்காவிலும்ஊழல் விசாரணை

## காங்கிரஸ் சபாநாயகர் இராஜினாமா

வாஷிங்டன், ஜூன் 1

அமெரிக்க காங்கிரஸின் சபாநாயகர் திரு. ஜிம்ரைட் நேற்று இராஜினாமாச் செய்தார்.

ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து திரு. ரைட் தனது இராஜினாமாவை நேற்றுச் சமர்ப்பித்தார்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டராக திரு. ரைட் அமெரிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்.

பிரபல வர்த்தக நிறுவனங்களுடன் இவருக்கு தொடர்பு இருந்து வந்தது என்றும்,

இவரும் இவரது மனைவியும் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து நன்கொடைகளைப் பெருந்தொகையாகப் பெற்று வந்தனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் இன்னொரு ஜனநாயகக் கட்சி செனட்டரும் ஊழல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து இராஜினாமாச் செய்து விட்டார்.

'எனது தனிப்பட்ட விவகாரங்களை பகிரங்கப்படுத்தும் விசாரணையில் கலந்து கொள்வதைவிட பதவியை இராஜினாமாச் செய்வது சிறந்தது' என்று செனட் குவைல் தெரிவித்தார்.

இப்போது இராஜினாமாச் செய்துள்ள சபாநாயகர் திரு. ஜிம் ரைட், அமெரிக்க அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், உப ஜனாதிபதி டொம்குயில் ஆகியவர்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர்.

ஜனாதிபதி, உப ஜனாதிபதி ஆகியோருக்கு ஏதும் நடந்தால், அல்லது அவர்கள் அப்பதவிகளை வகிக்க முடியாத நிலை ஏற்பட்டால் சபாநாயகர் தான் அமெரிக்க ஜனாதிபதியாவர்.

லண்டன்அரசியல்பாலியல்-உளவு மோசடியில் சம்பந்தப்பட்ட இந்திய அழகி பமேலாவும் திரு. ரைட்டுடன் நட்புக் கொண்டிருந்தார் என்றும் அதைப் பயன்படுத்தி பமேலா அமெரிக்காவுக்குச் செல்லும் பச்சை அடையாளக் கார்ட்டைப் பெற்றார் என்றும் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. [எ]

✶ ஜப்பான் ஊழல் விசாரணை:

## முன்னாள் பிரதமர் கட்சியை விட்டே வெளியேறுகிறார்!

டோக்கியோ, ஜூன்1

ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக பிரதமர் பதவியை முன்னர் இராஜினாமாச் செய்த திரு. சுஹிரோ நாகஸோனி இப்போது ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயக கட்சியில் இருந்தே இராஜினாமாச் செய்து விட்டார்

ஊழல் குற்றச் சாட்டுக் குறித்து அவர் அளித்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை என்று கட்சித் தலைமைப்பீடம் கருத்து வெளியிட்டது. அதைத் தொடர்ந்தே! நாகஸோனி கட்சியை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. (எ)

பாடசாலையால் வந்தவுடன்

## தினமும் ஐந்து நிமிடமாவது பிள்ளைகளுடன் செலவிடுங்கள்

### வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர்கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 2

'கல்லூரியால் வரும் தன் பிள்ளை அன்றைய தினம் என்ன படித்து விட்டு வருகிறார் என்று ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடமாவது பெற்றோர்கள் கவனித்தால் பிள்ளை ரியூட்டரிக்குப் போக வேண்டியதில்லை. பெற்றோரின் இக்குறைபாட்டால் நற்பிரசைகளாக வரவேண்டிய எம் இளம் சமுதாயம் தவறான வழி நடத்தலில் இருள்சூழ்ந்த ஓர் சூழ்நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறது'

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிமுன்னாள் அதிபர் திருமதி அ. இராஜரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரியில் கடந்த எட்டு வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபருக்கு கல்லூரி பழைய மாணவிகள் சங்கமும், கல்லூரி அபிவிருத்திச் சங்கமும் இணைந்து பிரிவுபசார விழா ஒன்றை நடத்தினர்.

கல்லூரி அதிபர் செல்வி ஆர். இராஜரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில் திருமதி இராஜரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

'இக்கல்லூரி வளர்ச்சிக்காக பழையமாணவர், பெற்றோர் காட்டிய ஆர்வம்போல தொடர்ந்தும் இக்கல்லூரி நல்ல நிலையில் சேவையாற்றி உழைக்க வேண்டும். நல்ல மாணவிகளை சமுதாயத்தில் உருவாக்கும் பணியில் புதிய அதிபர் செல்வி ஆர். இராஜரத்தினத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

வடமாநில பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பேசுகையில் கூறியதாவது;

'எந்த சமயமாக இருந்தாலும் ஆன்மீகபலம் சரியான பாதையைக் காட்டும். இவர் கோளறு பதிகத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டதால் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் எல்லாம் வெற்றி கண்டார் இவர் விட்டுச் சென்றுள்ள சிறந்த பாதையில் நடைபோட்டு பெண் சமுதாயத்துக்கு கலங்கரை விளக்காக இக்கல்லூரியைக் கட்டி எழுப்ப சகலரும் முன்வர வேண்டும் —

இப்படி அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பேசுகையில் கூறியதாவது;

'ஆசிரியர்களைப் பற்றி சமுதாயத்தில் குறைவாகக் கூறுவார்கள். ஆனால் ஆசிரியர்கள் குறைந்த வேதனத்தில் சமுதாயத்தின் பொறுப்பை உணர்ந்துசெயல்படுகிறார்கள் என்பதை அவர்கள் அறிவதில்லை.

எம் அதிபர் ஓய்வு பெற்றாலும், மாணவ சமுதாயத்துக்கு மேலும் சேவை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்—

இப்படி அவர் கூறினார்.

கோட்டக்கல்வி சிரேஷ்ட அதிகாரி திரு. சிவானந்தன் பேசுகையில்; 'ஓர் ஆசிரியர் 35 வருடம் சேவையாற்றி ஓய்வுபெறும்போது அவரை நாம் கௌரவிக்க வேண்டும். கௌரவித்து, நன்றி பாராட்டும் பண்பாடு படிப்படியாக எம்மத்தியில் இருந்து அருகி வருகிறது. இந்நிலை மாற வேண்டும்' என்றார்.

கல்லூரியின் பழையமாணவி செல்வி வடிவேலு கவிதை பாடினார்.

யாழ் மத்திய கல்லூரி நூலகரும்வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவருமான திரு. மாணிக்கவாசகரும் பேசினார். பரிசில்கள் வழங்கப்பட்டன. [இ-3]

கனகாம்பரி பத்மநாதனின்

## இசை அரங்கேற்றம்

சென்னை அடையாறு கர்நாடக இசைக்கல்லூரி சங்கீத வித்வான் செல்வி கனகாம்பரி பத்மநாதனின் இசை அரங்கேற்றம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்றுமணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

அளவெட்டி [illegible] கலாநிதி என். கே. பத்மநாதனின் மகள் [illegible] சென்னை அடையாறு கர்நாடக இசைக்கல்லூரியில் பயின்று சங்கீத வித்வான் பட்டத்தைப் பெற்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த அரங்கேற்றத்தில் யாழ். பல்கலைப்பீட நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தின[illegible] பல பிரமுகர்களின் வாழ்த்[illegible] (இ-3)

## காரைநகரில்

காரைநகர், ஜூன் 2

காரைநகரில் அடிக்கடி தேடுதல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

சிற்சில குறிச்சிகளில் இடம்பெறும் தேடுதலில் சிலர் கைது செய்யப்படுவதும் விசாரணையின் பின்னர் விடுவிடுக்கப்படுவதுமாக உள்ளது. (இ-73)

## சம்மாந்துறைச் சம்பவங்கள்:

### பல்கலை மாணவர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

அண்மைக்காலமாக சம்மாந்துறையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தமிழ்-முஸ்லிம் சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்த காலங்களில் கிழக்கு மாநிலத்தில் இரண்டு சமூகத்தினரிடையே தோன்றி மறைந்த மோதல்களை நோக்குமிடத்து இது ஒரு சிலரின் திட்டமிட்ட பின்னணியாக இருக்கலாம் என சந்தேகிக்கத் தோன்றுகிறது. சம்பந்தப்பட்ட இரு சமூகத்தினரும் புரிந்துணர்வின் அடிப்படையில் இம் மோதல்களைத் தவிர்த்து தமிழ் பேசும்மக்களின்ஒருமைப்பாட்டுக்கென செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். இம் மோதல்களைத் தூண்டும் வகையில் செயற்படும் சந்தர்ப்பவாதிகளை இனம் காண்பதுடன் அவர்களின் நடவடிக்கைகளுக்குத் துணை போகாது விழிப்புடன் செயற்படுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக மாணவர் கழகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலம் காலமாக ஒற்றுமையுடன் செயற்பட்டு வந்த தமிழ் பேசும் மக்கள் தம்மிடையே பிளவுண்டு மோதிக் கொள்வதால் தமிழ் பேசும் மக்களில் எவருமே நன்மையடையப் போவதில்லை. மாறாக தமிழ்ப் பிரதேசத்தில் நிரந்தர மோதல்களைத் தூண்டிவிட்டு சமூகங்களிடையே பகைமையையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்த விரும்பும் தீய சக்திகளே லாபமடைய முடியும்.

எனவே சமூகங்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாகக் கருதாமல் சமாதான பூர்வமான வழிகளிலே தீர்த்துக் கொள்வதற்கான முன் முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் மட்டுமே இந் நிகழ்வுகளினால் லாபமடைய முனையும் சக்திகளை ஒடுக்க முடியும்; ஒடுக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

சமய சந்நிதிகளில்

## வில்லூன்றி இரதோற்சவம்

யாழ்ப்பணம் ஜூன் 2

யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (ச)

## சுன்னாகம் அந்தோனியார் திருவிழா

சுன்னாகம், ஜூன் 2

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

சுன்னாகம் ஆலய பங்குத் தந்தை அருட் திரு. எம். அல்பேட் யோகராசா அடிகளார் கொடியேற்றி உற்சவத்தை ஆரம்பித்துவைப்பார்.

கொடியேற்றத்தை அடுத்து [9 நாள்] நவநாள்வழிபாடும், திருவுரையும் இடம்பெறும். 12 ஆம் திகதி திங்கள் மாலை 4-30 மணிக்கு திவ்விய நற்கருணை வழிபாடும், நற்கருணை பவனியும் இடம்பெறும்.

மறுநாள் காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலியுடன் திருச்சுருபபவனியும், சுருப ஆசீர்வாதத்துடன் உற்சவமும் பூர்த்தி அடையும். (இ-27)

## திறப்புவிழா

காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை ''நடராசா மன்ற'' திறப்பு விழா நடைபெறுகிறது

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

சிறுவர் சிறுமிகளின் கலை நிகழ்ச்சிகளும் முத்தமிழ் பேரவையின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-73)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லி கலந்த கோப்பி இப்போது 100gr. பக்கட்டுக்களில் வெளிவருகிறது.
1 பைக்கட் விலை ரூபா 11-50
வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

# உதயன்

02 - 06 - 1989 வெள்ளிக்கிழமை

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
பற்களுக்கு உறுதியும், வெண்மையும் கொடுப்பது

அண்ணா பற்பொடி

அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100gr. பைக்கட்டுக்களிலும் வெளிவருகின்றது.

100gr. வெற்றுப் பைக்கட்டுக்களைச் சேர்த்துக் கொடுத்து இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## புதிய இராணுவமுகாம் திறப்பதற்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
சம்மாந்துறையில் ஸ்ரீலங்கா இராணுவமுகாம் திறக்கப்படுவதை ஈ பி. ஆர். எல். எவ். கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா தெரிவித்திருப்பதாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் அவர்களது முகாம்களில் இருக்க முடியுமே தவிர வெளியே சென்று செயல்பட முடியாது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசானது ஒப்பந்தத்திற்கு முரணாக சம்மாந்துறையில் புதிய இராணுவ முகாம் அமைக்க முயற்சி செய்து வருகின்றது. சம்மாந்துறையில் ஏற்பட்டுள்ள இனமோதல்களுக்கான அடிப்படைக் காரணங்களையும், அது யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் கண்டுபிடிக்காமல் அவசரப்பட்டு புதிய இராணுவ முகாம் அமைக்க முயற்சிப்பது நிலமையை மேலும் சிக்கலாக்கவே வழி வகுக்கும்.

ஸ்ரீலங்கா அரசானது திட்டமிட்ட முறையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைதி ஏற்படுவதற்கு முரணாக செயல்பட்டுவருகின்றது. ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிற்குரிய அதிகாரங்களைக் கொடுப்பதில் இழுபறி நிலமையைத் தோற்றுவித்தது.

சம்மாந்துறையில் ஏற்பட்ட தமிழ், முஸ்லீம் கலவரத்திற்கு பின்னணியில் ஸ்ரீலங்கா பொலீசாரும் செயல்பட்டனர் என்பதை எம்மால் நிரூபிக்கமுடியும். எனவே இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி, அதனைக் காரணமாகக் காட்டி, புதிய இராணுவ முகாம்கள் திறப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டிய பொறுப்பு இந்திய-இலங்கை அரசுகள் இரண்டிற்குமே உரியது. எனவே ஸ்ரீலங்கா அரசின் இப்படியான திட்டமிட்ட முயற்சிகளை நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் ஒப்பந்தமானது அர்த்தமற்றுப் போவதுடன், ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் ஏற்றுக் கொண்டு நடப்பதா என்பதை நாம் மீள் பரிசீலனை செய்யவேண்டி ஏற்படும்.
(உ)

## இந்தியாவில் தேர்தல் டிசம்பர் கடைசியில்'

புதுடில்லி, ஜூன் 2
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வருகிற டிசம்பர் மாதம் மூன்றும் அல்லது நான்காம் வாரத்தில் நடைபெறும்

இந்திராகாங்கிரஸ் பொதுச் செயலாளர் யு. என். காட்கில் மேற்கண்ட தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இந்திரா காந்தி மறைவு தினமான அக்டோபர் 31ஆம் திகதி நடத்தப்படும் என்ற செய்தியில் உண்மை இல்லை என்றும் திரு. காட்கில் சொன்னார்.
(உ-எ)

## இன்று திறப்பு விழா

சாவகச்சேரி, ஜூன் 2
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா இன்று நடைபெறவிருக்கிறது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்,
(சூ-31)

## நேற்று நடந்த நேர்முகப் பரீட்சை: ஐந்து வெற்றிடங்களுக்கு ஐந்நூறு பேர் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள ஐந்து பாதுகாப்பு ஊழியர்கள் வெற்றிடங்களுக்கு ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வந்தனர்.

நேற்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் மார்பளவு, உயரம் ஆகியன பதியப்பட்டன. மீண்டும் இன்னொரு தடவை இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஆறும் திகதி இடம்பெறும் சிற்றூழியர்கள் நேர்முகப் பரீட்சைக்கு 540 பேர் வரையில் தோற்றவிருக்கின்றனர் ஆனால் வெற்றிடங்கள் பத்து மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டது.
[ஓ-3]

### செய்திச் சாரம்

## பருத்தித்துறை வல்வையில் ஹர்த்தால்

வடமராட்சி, ஜூன் 2
வடமராட்சியின் சில பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. குறிப்பாக பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் அனேகமாக அலுவல்கள் ஸ்தம்பித்திருந்தன.

அனேகமான கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகளும் இயங்கவில்லை போக்குவரத்தும் ஸ்தம்பித்தது.

மரணமான ஒருவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையிலேயே நேற்று இந்த ஸ்தம்பித நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.
[ஓ-160]

## கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, ஜூன். 2
பளைப் பகுதியில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் அசம்பாவிதங்களை, தொடர்ந்து பலர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளார்கள்.
(ஓ-76)

## பால் அருந்திய மாணவிகள் ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சி, ஜூன் 2
பாடசாலைகளின் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பால் அருந்திய இரண்டு பாடசாலை மாணவிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஆனையிறவில் உள்ள பாடசாலை ஒன்றில் வழங்கப்பட்ட பாலை அருந்திய வை. சுசிகலா [வயது 10], எம். மங்களாதேவி (வயது 12) என்னும் மாணவிகள் இருவரும் உடனடியாக வாந்தி எடுத்தனர். பின் மயக்கமானார்கள்.

இவர்கள் பின்னர் கிளிநொச்சி மருத்துவ மனைக்கு எடுத்துவரப்பட்டு வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்
(உ-76)

## கோப்பாய் நீர்வேலியில்...

கோப்பாய், ஜூன் 2
கோப்பாய், நீர்வேலி, புத்தூர்ப் பகுதிகளிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

காலை 10 மணிவரை நீர்வேலிப் பகுதியினூடாக வாகனங்கள் செல்லவில்லை. 10மணியின் பின்னரே வாகனங்களின் போக்குவரத்து நடைபெற்றது.

நீர்வேலிப் பகுதிப் பாடசாலைகளில் மாணவரின் வரவு மிகக் குறைவாகவே காணப்பட்டது.
(ஓ-72)

## சிறுவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
வீட்டில் நிலத்தில் புதைந்து கிடந்த உருண்டையான பொருள் ஒன்றை எடுத்து சுத்தியலால் அடித்த இரு சிறுவர்கள், அப்பொருள் வெடித்ததினால் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் காங்கேசன்துறைப்பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்தவர்களான கார்த்திகேசு சந்திரகுமார் (வயது 10), கார்த்திகேசு சிவகுமார் [வயது 4) ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்,

இந்தப் பகுதியில் முன்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர் எனச் சொல்லப்பட்டது.

## கடந்த மாதம் 11பேர் தற்கொலை

யாழ்: ஆஸ்பத்திரி பதிவுகளின்படி கடந்த மாதத்தில் மட்டும் பதினொருபேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் துப்பாக்கிச் சூடு மற்றும் கொலை முயற்சி சம்பவங்களிற்கு இலக்காகி 26 பேரும், வாகன விபத்தில் சிக்கி ஐவரும் உயிரிழந்ததாக ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதி பதிவுகள் தெரிவித்தன.
(உ-9)

‘ஜனசக்தி திட்டமும் கூட்டுறவு அமைப்பும்’’

## கொழும்புக் கருத்தரங்குக்கு யாழ். மாவட்ட அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2
‘ஜனசக்தி திட்டமும் கூட்டுறவு அமைப்பும்’ என்னும் தலைப்பில் விசேட கருத்தரங்கு ஒன்று நாளை (மூன்றும் திகதி) கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேசமண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

கூட்டுறவுத் திணைக்களமும், தேசிய கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும் இக் கருத்தரங்குக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்க தலைவர்களும், கூட்டுறவுத் துறை உயர் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இக் கருத்தரங்கை உணவு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஆரம்பித்து வைப்பார்.

கூட்டுறவு, உணவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் இக் கருத்தரங்கில் உரையாற்றுவார்கள்.
(ஓ-3)

**கர்ப்பிணி--.**

யிருக்கிறதாம்.

இந்த ஆஸ்பத்திரியில் தினசரி 20 குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் பிறந்த குழந்தைகளை போடுவதற்கு ஆஸ்பத்திரியில் ஒரேயொரு தொட்டில் மட்டுமே இருக்கிறன்றவாம்.

**பருத்தித்துறை---**

றது என்றும், அப்போது நடந்த ஷெல் தாக்குதலின் போது சிறுவன் ஒருவன் காயமடைந்தான் என்றும் தெரிய வருகிறது.

மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் ஹரிதரன் (வயது 14) என்பவரே காயமடைந்தவராவர். இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு உள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் யோகமூர்த்தி (வயது36) என்ற குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சில பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதால் அப்பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள், பாதிப்புகள் தெரியவரவில்லை.

பருத்தித்துறையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று புலோலி கந்தமுருகேசனார் சிலைக்கு முன்பாக விழுந்து வெடித்ததால் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே பகுதியில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சேத விவரம் ஏதும் தெரிய வரவில்லை.

பருத்தித்துறைப் பகுதியில் இரு பஸ்கள் எரிக்கப்பட்டதாகவும், மினிவுத் தூபி ஒன்று சேதமாக்கப்பட்டதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவங்களால் இப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் பீதியுடன் காணப்பட்டனர்.
[ஓ-160]

**அமைதிப்படை---**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தவறினால் நாம் தேசத் துரோகிகளாக கணிக்கப்படுவோம்.

உள்நாட்டுப் பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் தீர்க்க வேண்டியது அவசியம்.

எவருடனும் பேச்சுக்களை நடத்துவதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேன்.

-இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார்.
(உ-எ)

**பல்கலைக்கழக.--**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி
டால் இங்கும் வேலை நிறுத்தம் உடன் கைவிடப்படும்.

வேலை நிறுத்தம் தொடர்ந்தால் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற இருக்கும் பொதுச்சபைக்கூட்டத்தில்முக்கியமுடிவு மேற்கொள்ளப்படும் என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.
[ஓ-3]

## சுரங்கம் இடிந்து 165பேர் மரணம்!

பிலிப்பீன்ஸில் மின்டொனாவில் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் 165பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடும் மழை காரணமாக சுரங்கம் இடிந்து விழுந்தது. நேற்றுவரை 11 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
(உ-எ)

## உணவு முத்திரை

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரதேசத்துக்குள் வதிவோருக்கான உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் 90 சதவீதம் பூர்த்தி அடைந்துள்ளன.
(ச 126)

## சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
கடந்த சனிக்கிழமையன்று தெல்லிப்பளையில் வைத்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தொண்டமனாறு பிரசைகள் குழுப் பிரமுகர் விஜயநாயகம் விஜயகுமார் [வயது 45] நேற்றுக்காலையில் நாவாந்துறையில் வைத்து சடலமாக மீட்கப்பட்டார்.

நாவாந்துறையில் கிடக்கக் காணப்பட்ட இவரது சடலத்தை அமைதிப்படையினர் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

## மரணமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 2
கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை யாழ். நகரில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

இறந்தவர் சி. கருணாகரன் (வயது30) என அடையாளம் காணப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு பார்வதி

வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சேரியடி முதலியார் லேனில் வசித்தவருமான திருமதி கதிரவேலு பார்வதி 1-6-89 நேற்றுக்காலமானார். இவர் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்புத் தாயாரும், பொன்னுவின் அன்புச் சகோதரியும், நேசமணியின் அன்பு மாமியாரும், சந்திராதேவி, சந்தானலட்சுமி, குகதாஸன் (நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ்ப்பாணம்), சூரியகுமார் (பிரான்ஸ்), வன்னியசிங்கம் (தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்), தேவமலர், நடேசலிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், தர்சினி, சந்திரமாலா (நோர்வே), ரஜனி, பிரணவன், சுதர்ஜினி, சுதர்ஜன், தர்மலா, ஷர்மிலா, பிரியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 3-6-89 நாளை சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:
ச.வன்னியசிங்கம்.

28/1 முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு.
யாழ்ப்பாணம்.
(11121)

### இராமலிங்கம் துஷ்யந்தன்

செல்வன் துஷ்யந்தன் 1-6-1989 இல் காலமானார். இவர் பத்மநாதன் இராமலிங்கம் இராஜலட்சுமி தம்பதிகளின் அருமை மகனும், மகிந்தா, (கனடா). இரம்மியா, கபிலன் (பரியோவான் கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரரும், நல்லூர் பாட்டி இராஜேஸ்வரி, உரும்பிராய் தெற்கு பூரணம் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 1-6-1989 மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பத்மநாதன் இராமலிங்கம்.

373, நாவலர் ரோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(11120)

### திரு. நாகரெட்ணம் ஆனந்தராஜா (ஆனந்தி)

(வைத்தீஸ்வரா கல்லூரி மாணவன்)

திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. நாகரெட்ணம் ஆனந்தராசா(ஆனந்தி) வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் அகாலமரணமடைந்து விட்டார். இவர் திரு. திருமதி நாகரெட்ணம் அவர்களின் புதல்வனும், நவரட்ணராஜா, சிவானந்தராஜா, ஜெயானந்தராஜா, விஜயராஜா, ஸ்ரீகந்தராஜா, ரெத்தினகுமாரி, விஜயகௌரி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(2-6-89) காலை 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. நாகரெட்ணம்
(M. M. அப்துல்லா சாரதி)

திருநெல்வேலி.
(11132)

## வைத்திய முறையின் அரிய கண்டுபிடிப்பு

நேச்சுறல் வில்லையுறைகள்

இக்கால முறைக்கேற்ப பாரம்பரிய மூலிகை நிவாரணிகள்

வல்லாரை, பாகற்காய், பிற்றவக்க பிளஸ்:-

காலாகாலமாக எம் மக்களின் பாரம்பரிய பயனுள்ளதொரு மூலிகை ஆகும். இவைகள் காலத்தின் சோதனைகளுக்கு ஈடு கொடுத்து வந்துள்ளன.

வல்லாரை மூலிகை:-

போஷாக்குச் சக்தி மட்டுமின்றி, மண்டைப் பீனிசம், கபாலஇடி' நரம்புத்தளர்ச்சி போன்ற கோளாறுகளின் பாரிகாரத்துக்கும் அத்துடன் மூளை வளர்ச்சியையும் ஞாபக சக்தியையும் விருத்தி அடையச் செய்கின்றது.

பாகற்காய் மூலிகை:-

நீரிழிவுக்கு இயற்கை பரிகாரம்.

முக்கிய குறிப்பு:-

இன்சுலின் அல்லது நீரழிவு வில்லைச் சிகிச்சை பெறும் நோயாளிகள் வைத்திய ஆலோசனை பெற்ற பின்னரே இவ் வில்லையுறைகளைப் பாவிக்க வேண்டும்.

பிற்ற வக்க பிளஸ் மூலிகை:-

மதுபானத்தால் ஏற்படும் அழிவுக்கும். ஈரல் வியாதிகளுக்கும், உடலில் நச்சுத் தன்மைகளால் ஏற்படும் வியாதிகளையும் குணப்படுத்த கைகண்ட நிவாரணி. பல வருட ஆராய்ச்சிகளின் பயனாக வசதியான வில்லையுறை வடிவில் பலமூலிகை நிவாரணிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடங்கள்:-

சூர்யா பார்மஸி. — கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
குட்லக் பார்மஸி, — ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
ஜெனரல் ட்ரேட்ஸ், — மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
பேருவளை பார்மஸி, — கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு, வைத்திய ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

டாக்டர் V. ஏகாம்பரம்
76. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

[841]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 02 — 06 — 89 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org